**தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் - 2020**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 மறுக்கப்பட்ட அபிப்பிராயம்**

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் (''நிதியம்'') 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்கவும் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்திற்கு இணங்கவும் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.
நிதியத்தின் நிதி அறிக்கைகள் குறித்து நான் எந்த கருத்தையும் தெரிவிக்கவில்லை.எனது அறிக்கையின் மறுக்கப்பட்ட அபிப்பிராயத்தின் பிரிவில் விவாதிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக, இந்த நிதி அறிக்கைகள் மீதான கணக்காய்வுக் கருத்துக்கான அடிப்படையை வழங்க போதுமான கணக்காய்வுச் சான்றுகளை என்னால் பெற முடியவில்லை.

**1.2 மறுக்கப்பட்ட அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் பந்தி 1.5 இல் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களில் எனது அபிப்பிராயம் மறுக்கப்படுகிறது

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்பட்டுகின்றன.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்பு**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்பித்தல் மற்றும் மோசடி தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாட்டுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பிடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்தல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்தல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கூடியவாறு நிதியம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்து பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான

உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்க்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளைகளிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்க்கொள்ளப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்க்கொண்டு உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்க்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல் மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றினை விடக் கூடியதாகும்.

- சுந்தர்ப்பங்களிற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்தில் அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதீப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிதியத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும்.எனது கணக்காய்வு அறிக்கை திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதீப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதீப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிதியம் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிதியம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிதியத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதி அறிக்கைகளை தயாரிப்பதில் கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதி அறிக்கைகளை தயாரிப்பதில் உள்ளகக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (a.) பின்வரும் காரணங்களால் பலவீனமான கட்டுப்பாட்டு சூழல் காணப்பட்டது.<br>(i.) நான்கு (04) முக்கிய முகாமைத்துவப் பதவிகளில் இருந்து மூன்று (03) பதவிகள் வெற்றிடமாக உள்ளன. தலைமைச் செயல் அதிகாரி மற்றும் உதவிப் பொது முகாமையாளர் - நிதி ஆகிய வெற்றிடங்கள் அவர்களின் நிரந்தர பொறுப்புக்களுக்கு மேலதிகமாக இயங்கு செயலமர் பணிபுரி நடவடிக்கை அடிப்படையில் நிரப்பப்பட்டன. உதவி பொது முகாமையாளர் - செயல்பாடு, பதவியானது பணிநிலை விபரம் அங்கிகரிக்கப்பட்ட திகதியான 01 நவம்பர் 2016 முதல் வெற்றிடமாகவே உள்ளது. மேலும் ஏழு (07) முகாமைத்துவப் பதவிகளில் ஐந்து (05) பதவிகள் | எவ்வாறாயினும், நிறுவன இலக்குகளை அடைவதற்கு நிறுவனத்தின் சுமூகமான செயல்பாட்டிற்காக அந்த வெற்றிடங்களை நிரப்புவது அவசியமானதாக இருந்தாலும், நிறுவனம் மதிப்பீட்டு முகசாமையாளர் மற்றும் இடர் பொறியாளருக்கான ஆட்சேர்ப்பு செயல்முறைகளை செய்துள்ளது. "முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை எண் 02/2016" ஐ NITF பின்பற்ற வேண்டியிருப்பதால், தொழில்துறையுடன் ஒப்பிடும்போது NITF வழங்கும் குறைந்த ஊதியம் காரணமாக இந்த வெற்றிடங்களை நிரப்ப முடியவில்லை. மேலும். 2019 முதல் அனைத்து ஆட்சேர்ப்புகளையும் அரசாங்கம் நிறுத்தியுள்ளது. NITF ஆனது அந்த வெற்றிடங்களை பெருநிறுவன திட்டத்தின்படி எதிர்கால செயல்பாட்டுத் தேவைகளுடன் நிரப்ப எதிர்பார்க்கிறது மற்றும் நடைமுறையில் உள்ள ஒழுங்குமுறையின் கீழ் பணியமர்த்துவதற்கு அமைச்சிடம் இருந்து சிறப்பு அனுமதியைப் பெற வேண்டும். | முக்கிய முகாமைத்துவ பதவிகளை நிரப்பவும் கட்டுப்பாட்டு சூழலை வலுப்படுத்தவும் முகாமைத்துவம் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வெற்றிடமாக இருந்தன மற்றும் மூன்று (03) முகாமைத்துவப் பதவிகள் அவர்களின் நிரந்தர பொறுப்புக்களுக்கு மேலதிகமாக இயங்கு செயலமர் பணிபுரி நடவடிக்கை அடிப்படையில் நிரப்பப்பட்டன. எனவே உள்ளக கட்டுப்பாட்டு அபிவிருத்தியின் சாத்தியக்கூறுகள், உள்ளக கட்டுப்பாட்டு முறைமை மற்றும் அபிவிருத்தி ஆகியவற்றின் அமுலாக்கங்களின் வினைத்திறனான கண்காணிப்பு உள்ளக கட்டுப்பாடு குறைக்கப்படுவதை வலுப்படுத்தும். | | |
| (ii.) | அந்த செயற்பாடுகளை மேற்க்கொள்ளுவதற்கு ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்டுள்ள தேவையான திறன்களைக் கொண்ட பொறுப்புள்ள பிரிவுகள் மற்றும் அதிகாரிகள் இல்லாத காரணத்தால் மதிப்பீட்டு செயற்பாடு, இடர் முகாமைத்துவ செயற்பாடு, முதலீட்டுச் செயற்பாடு மற்றும் ஆராய்ச்சி அபிவிருத்திச் செயற்பாடு ஆகிய செயற்பாடுகள் பயனுறுதி மிக்க வகையில் மேற்க்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.<br>எனவே, இடர்களை சரியான நேரத்தில் கண்டறிதல் மற்றும் அந்த அபாயங்களை குறைப்பதற்கான உத்திகளைச் செயல்படுத்துதல், உண்மையான மதிப்பீடுகளைச் செய்வதற்கான | மதிப்பீட்டு செயற்பாடு, இடர் முகாமைத்துவ செயற்பாடு மற்றும் முதலீட்டு செயல்பாடு ஆகியவை அர்ப்பணிப்புள்ள ஊழியர்களால் நிரப்பப்படவில்லை என்றாலும், அந்த செயல்பாடுகள் வெற்றிகரமாகவும் திறம்படவும் செய்யப்படவில்லை அல்லது எல்லா நேரத்திலும் செயல்படவில்லை என்று அர்த்தமல்ல என்பது கவனிக்கப்பட வேண்டும். மதிப்பீட்டு செயல்பாட்டைப் பொறுத்தவரை, இந்த செயல்பாடானது ஆயுட்கால மதிப்பீட்டாளர் M/s NMG கன்சல்டன்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் நியமிகக்கப்படுவதற்கு வெளிக்களம் செய்யப்பட்டது. இது உள்ளூர் மற்றும் உலகளாவிய சூழலில் முன்னணி மதிப்பீட்டு நிறுவனங்களில் ஒன்றாகும். அவர்கள் IBNR மதிப்பீடுகள் மற்றும் கடன்தீர்திறன், RBC மற்றும் நிதிப் பிரிவின் ஆதரவுடன் IRCSL க்கு மற்ற சான்றிதழ்கள் உட்பட ஒழுங்குமுறை அறிக்கையிடலில் திறம்பட ஈடுபடுகின்றனர். IRCSL கூட இதுவரை செயல்பாட்டின் பயனுறுதிமிக்க செயல்பாடு குறித்து NITF ஐ கேள்வி கேட்கவில்லை.<br>முதலீட்டுச் செயல்பாடுகள்- NITF ஆனது சட்டத்தின் படி அரசுப் பத்திரங்களில் மட்டுமே முதலீடு செய்ய முடியும். முதலீட்டு செயல்பாடுகள் சிக்கலானவை அல்ல. எனவே, | அந்த செயல்பாடுகளை திறம்பட இயக்குவதற்காக தேவையான வளங்களுடன் அந்த முக்கிய பிரிவுகளை நிறுவுவதற்கு முகாமைத்துவம் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| துல்லியமான தகவல்களை வழங்குதல் ஆகியவை பயனுள்ளதாக இருக்காது. | ”அபாயங்களை சரியான நேரத்தில் கண்டறிதல் மற்றும் அந்த அபாயத்தைக் குறைப்பதற்கான உத்திகளைச் செயல்படுத்துதல், உண்மையான மதிப்பீடுகளைச் செய்வதற்கு துல்லியமான தகவல்களை வழங்குதல் சாத்தியமாக இருக்க முடியாது” என்ற உண்மையை NITF மறுக்கிறது. அர்ப்பணிப்புள்ள ஊழியர்களைக் கொண்டிருப்பதன் மதிப்பை நாங்கள் அறிவோம் மற்றும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு தேவையான நடவடிக்கைகளை ஏற்கனவே எடுத்துள்ளோம். எவ்வாறாயினும், மேலே குறிப்பிட்டுள்ளபடி, நாட்டின் தற்போதைய நிலைமை மற்றும் முக்கியமாக NITF இன் குறைந்த சம்பள அளவுகள் ஆகியவை பொருத்தமான மனித மூலதனத்தை ஈர்ப்பதில் தாமதத்தை மோசமாக பாதித்துள்ளன. | |
| (iii.) 2020 ஆம் ஆண்டிற்கான உள்ளகக் கணக்காய்வு மற்றும் கணக்காய்வு குழு என்பன செயற்பட்டிருக்கவில்லை . எனவே வழக்கமான அடிப்படையில் உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகளை மதிப்பாய்வு செய்தல் மற்றும் மதிப்பீடு செய்தல், கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குவதை உறுதி செய்வதற்காக நிதி அறிக்கைகளை மதிப்பாய்வு செய்தல் என்பன மேற்க்கொள்ளப்பட்டிருக் கவில்லை. | பிரிவின் தலைவர் பதவி வெறுமையாக இருப்பதால் உள்ளக கணக்காய்வு மற்றும் கணக்காய்வு குழு செயல்படவில்லை என்பதை NITF ஒப்புக்கொள்கிறது. 2020 ஆம் ஆண்டில் நிலவிய கோவிட் 19 தொற்று நிலைமை காரணமாக கணக்காய்வுக் குழுவின் பதவியை நிரப்புவதும் அதன் செயல்பாடும் தாமதமானது. | கணக்காய்வுக் குழுவின் திறமையான செயல்பாட்டை முகாமைத்துவம் உறுதி செய்ய வேண்டும். |
| (iv.) அக்ரஹாரா இன்சூரன்ஸ் திட்டத்தில் ஊழியர் ஒருவர் செய்த மோசடி தற்செயலாக அக்டோபர் 2022 இல் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த மோசடி 2018 ஆம் ஆண்டு முதல் செய்யப்பட்டுள்ளது மற்றும் உள்ளக கணக்காய்வு அறிக்கையின் படி | முகாமைத்துவத்தால் பதில்கள் எதுவும் வழங்கப்படவில்லை. | மோசடிகளைத் தவிர்ப்பதற்கும் மோசடி அபாயத்தைக் குறைப்பதற்கும் உள்ளகக் கட்டுப்பாட்டின் உறுதியான அமைப்பை முகாமைத்துவம் உறுதி செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கண்டுபிடிக்கப்பட்ட நிதி இழப்பு ரூபா. 5,136,000 ஆகும். முறையான மேற்பார்வை மற்றும் கண்காணிப்புடனான உறுதியான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையின் வடிவமைப்பு மற்றும் செயல்படுத்தல் என்பவை பற்றாக்குறையான காரணத்தால் இது நடந்தது. மேலும் நிதிக்கான கட்டுப்பாட்டுச் சூழலின் உறுதியான முறைமை இல்லை என்பதை இது காட்டுகிறது. | | |
| (b.) | உரிமைக்கோரல் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வது முதல் உரிமைக்கோரல்களைத் தீர்ப்பது வரையான அக்ரஹாரா உரிமைக்கோரல்களை கையாள்வதற்கான ஒருங்கிணைந்த முறைமை மற்றும் நிதி அறிக்கையிடல் செயல்முறைக்கான ஆண்டு இறுதியில் உரிமைக்கோரல் பொறுப்புக்களை அடையாளம் காணல் என்பவை நிதியத்திற்கு கிடைப்பனவு அற்றதாக இருக்கிறது. | அவதானிப்புடன் உடன்பட்டது. இருப்பினும், உரிமைகோரல் பொறுப்பை ஏற்றுக்கொள்வது மற்றும் அடையாளம் காண்பது தவிர, அக்ரஹார உரிமைகோரல் பிரிவு ஒரு ஒருங்கிணைந்த அமைப்புடன் செயல்படுகிறது, இது உரிமைகோரல் செயல்முறையின் முதல் கட்டமாக செய்யப்படுகிறது. உரிமைகோரல் செயலாக்க அமைப்பு மாற்றங்களின் இந்த ஆரம்ப நிலைகளானது 2022-2025 பெருநிறுவன திட்டத்தில் பரிசீலிக்கப்பட்டு தற்போது முன்னேற்றமடைந்து வருகிறது. | அக்ரஹார காப்புறுதித் திட்டத்திற்காக உறுதியான உள் கட்டுப்பாட்டு அமைப்பை அறிமுகப்படுத்த முகாமைத்துவம் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |
| (c.) | வேலைநிறுத்தம், கலவரம், சிவில் கலவரம் மற்றும் பயங்கரவாத நிதியம் (SRCC & Tr Fund) ஆகியவற்றின் கொடுக்கல் வாங்கல்கள் மூல ஆவணங்களைப் பயன்படுத்தி எக்செல் கோப்புக்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. மற்றும் ஆண்டின் இறுதியில் எக்செல் கோப்புக்களில் பதிவு செய்யப்பட்ட அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் கையேட்டு பேரேட்டிற்கு புதுப்பிக்கப்பட்டு கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டன. 2019 ஆம் ஆண்டில் SAGE கணக்கியல் முறைமையில் இந்த வசதி வழங்கப்பட்டிருந்தாலும், வேலைநிறுத்தம் கலவரம் சிவில் கலவரம் மற்றும் பயங்கரவாத நிதியத்தின் (SRCC & Tr Fund) நிதி | கையேடு மற்றும் SAGE கணக்கியல் முறை இரண்டும் ஒரே நேரத்தில் SRCC & TC மூலம் கணக்கீட்டிற்குப் பயன்படுத்தப்பட்டது. 2020 இல் SRCC & TC மூலம் SAGE கணக்கியல் முறை ஆண்டு முழுவதும் கணக்கீட்டிற்கு முழுமையாகப் பயன்படுத்தப்பட்டது. கணக்காய்வாளர்களுக்கு வழங்கப்பட்ட அதே பயனர் அடையாளம் மற்றும் கடவுச்சொல் மூலம் அமைப்பை சரிபார்க்க அமைப்பு அணுகல் கிடைப்பனவாக இருக்கிறது. | முகாமைத்துவம் நிதித் தகவல் அமைப்புகளை சரியான நேரத்தில் புதுப்பிப்பதை உறுதிசெய்து தகவல் ஒருமைப்பாட்டை உறுதி செய்ய வேண்டும். |

| | | |
|---|---|---|
| அறிக்கை செயல்முறைக்கு அந்த வசதி பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (d.) அக்ரஹார சாதாரண, வெள்ளி, தங்க தவணைகளுக்கான வருமானம் மற்றும் செலவின் ஒரு உருப்படியாக நிதி அறிக்கைகளில் உரிமைக்கோரல்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. முறையான மற்றும் புதுப்பிக்கப்பட்ட தரவுத்தளம் இல்லாததால் ஒவ்வொரு அக்ரஹாரா காப்புறுதித் திட்டங்களிலிருந்தும் நிதியத்திற்கு அளிக்கப்பட்ட பங்களிப்புக்கள் மற்றும் ஏற்பட்ட உரிமைக் கோரல்களுக்கான ஆதாரங்களைப் பெறுவதும் மற்றும் ஒவ்வொரு நிறுவனத்தாலும் ஒவ்வொரு காப்புறுதி பத்திர உரிமையாளராலும் நிதியத்திற்கு வழங்கிய மாதாந்த பங்களிப்புக்களின் விரிவான பதிவைப் பெறுவதும் கடினமாகும். | விரிவான புதுப்பிக்கப்பட்ட தரவுத் தளம் கிடைக்காததன் அடிப்படையில் அவதானிப்புடன் உடன்பட்டது. இருப்பினும், தற்போதுள்ள அமைப்பில், சில நிறுவனங்களைத் தவிர, அக்ரஹார சாதாரண, வெள்ளி மற்றும் தங்க தவணைப்பணங்கள் தனித்தனியாக வழங்கப்பட முடியும். எவ்வாறாயினும், நிதி அமைச்சின் ஆதரவுடன் ஒரு புதிய விரிவான தகவல் அமைப்பு செயல்படுத்தப்பட்டுள்ளது மற்றும் எதிர்காலத்தில் இது நடைமுறைக்கு வரும். | அக்ரஹார காப்புறுதித் திட்டத்திற்கான தவணை வசூல் மற்றும் உரிமைக்கோரல் செயலாக்கத்திற்கான பயனுறுதி வாய்ந்த அமைப்பை உறுதி செய்ய முகாமைத்துவம் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் |
| (e.) உரிமைக்கோரல்களைக் கையாளும் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் மீள் காப்புறுதிப் பிரிவில் பதிவுகளை வைத்திருப்பதற்கு அது கைமுறையாக பராமரிக்கும் போது முறையான அமைப்பு அங்கே இருக்கவில்லை. | RI பிரிவின் உரிமைகோரல் கையாளுதல் செயல்முறைக்கான அவதானிப்புடன் உடன்பட்டது. Sage ACCPAC இன் பெறவேண்டிய கணக்குகள் தொகுதி தற்போது எழுத்துறுதி செயல்முறைகளுக்காக செயல்பாட்டில் உள்ளது. மேலும், பெருநிறுவன திட்டம் 2022-2025 இன் படி RI பிரிவின் உரிமைகோரல் கையாளுதலுக்கான அமைப்பை NITF தற்போது உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. | முகாமைத்துவமானது பயனுறுதி வாய்ந்த அறிக்கையிடல் அமைப்பு இருப்பதை உறுதி செய்ய வேண்டும். |

**1.5.2 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

| குறிப்பிட்ட தரநியம குறிப்புடன் இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (a.) **LKAS 8 – கணக்கியல் கொள்கைகள், கணக்கியல் மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் பிழைகள்**<br><br>கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையிடமிருந்து (AAIB) கமநல காப்புறுதித் திட்டத்திற்காக பெறப்பட்ட மீள் காப்புறுதி தவணை ரூபா. 148,380,847 ஆனது 2019 ஆம் ஆண்டில் மொத்த எழுதப்பட்ட தவணையாக இனங்காணப்பட்டிருந்தது. மேலும் இந்த வருமானம் 2020 | கமத்தொழில், கிராமப்புற பொருளாதார விவகாரங்கள், கால்நடை மேம்பாடு, நீர்ப்பாசனம் மற்றும் கடற்றொழில் மற்றும் நீர்வள மேம்பாட்டு அமைச்சின் செயலாளரின் கோரிக்கையின் பேரில், NITF ஆனது AAIB க்கு மீள்காப்புறுதி பயிர் (crop) மதிப்பீட்டு அதிகப்படியான இழப்பு மீள்காப்புறுதி காப்பீட்டை நீட்டிக்க ஏற்றுக்கொண்டது. அதன்படி, 2019 இல் பெறப்பட்ட மொத்த தவணைப்பணம் இலங்கை ரூபா.148,380,8471 ஆகும். இதற்கிடையில், நிதி அமைச்சிடம் | முகாமைத்துவம் நிதி அறிக்கைகளில் உள்ள பொருண்மையான முந்தைய காலப் பிழைகளை பின்னோக்கிச் சீராக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| ஆம் ஆண்டில் கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையிற்கு திருப்பி அனுப்பப்பட்டது. ஏனெனில் இந்தக் கட்டணத்தை ஏற்க தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்திற்கு எந்த சட்டப்பூர்வ அதிகாரமும் இல்லை. 2019 ஆம் ஆண்டிற்கான ஒப்பீட்டுத் தொகைகளை மறுபரிசீலனை செய்வதன் மூலம் மீளாய்வின் கீழ் உள்ள காலகட்டத்தில் நிதி அறிக்கைகளில் இந்தப் பிழை திருத்தம் சரி செய்யப்பட்டிருக்கவில்லை. நியமத்தின் 42 வது பந்தியின் படி பிழை ஏற்பட்டது. | ஒப்புதல் பெற NITF சபை அறிவுறுத்தியது. l2l08l2020 அன்று நிதியை முழுமையாகத் திருப்பிக் கொடுக்க சபை முடிவு செய்தது. அதன்படி, AAIB க்கு 2S/0912020 இல் நிதி திருப்பிக்கொடுக்கப்பட்டது. பரிந்துரைக்கப்பட்டபடி ஒப்பீட்டை மறுபரிசீலனை செய்ய இது கணக்கியல் பிழை அல்ல என்பதை தயவுசெய்து கவனிக்கவும். | |
| (b.) **LKAS 12 – வருமான வரி**<br><br>31 டிசம்பர் 2020 இல் ரூபா.934,018,739 தொகையான ஒத்திவைக்கப்பட்ட வரிப் பொறுப்பை நிதியம் இனங்கண்டிருக்கவில்லை. மேலும், ஒத்திவைக்கப்பட்ட வரியின் கணக்கீட்டிற்கான கணக்கீட்டுக் கொள்கை எதுவும் வெளியிடப்படவில்லை. | அவதானிப்புடன் உடன்படுகிறோம். ஒத்திவைக்கப்பட்ட வரி கணக்கீடு செய்யப்படும் மற்றும் எதிர்கால அறிக்கையில் வெளிப்படுத்தப்படும். | முகாமைத்துவமானது ஒத்திவைக்கப்பட்ட வரிவிதிப்புக்கான கணக்கீட்டிற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

**1.5.3 கணக்கீட்டு குறைபாடுகள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவ கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| (a.) விகிதாசார ஒப்பந்த மீள் காப்புறுதி ஒப்பந்தங்களுக்கான நிதியத்தின் கணக்கீட்டுக் கொள்கையின் படி, காப்புறுதி தவணையானது மீள் காப்புறுதிக்கான தலைமை நிறுவனத்தின் உறுதிப்படுத்தலுடன் இடரை மாற்றுகின்ற காப்புறுதி நிறுவனத்திடமிருந்து (cedants with the leader) அவ்வப்போது பெறுகின்ற முறையான அறிவிப்பு ஆலோசனை ஆவணம் பெறப்பட்ட போது இனங்காணப்படும். எவ்வாறாயினும், கணக்கீட்டுக் கொள்கைக்கு மாறாக 2020 ஆம் ஆண்டுக்கு முந்தைய ஆண்டுடன் தொடர்புடைய மீள் காப்புறுதி தவணையான ரூபா.628,756,431 ஆனது மதிப்பாய்விற்கு உட்பட்ட ஆண்டிற்கு இனங்காணப்பட்டிருந்தது. மேலும் மீள் காப்புறுதிக்கான | மீள்காப்புறுதி தவணைப்பணத்தை இனங்காண்பதற்கான கொள்கை நிதி அறிக்கைகளில் வெளியிடப்பட்டது மேலும் அது கொள்கைக்கு ஏற்ப உள்ளது மற்றும் வினவலில் குறிப்பிடப்பட்டுள்ளபடி முரண்படவில்லை. விலைப்பட்டியல் செய்யப்பட்ட தொகை ரூபா. 628,756,431 மற்றும், ரூபா. 718,436,154 முறையே 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டில் மீள்காப்புறுதிப் பிரிவினால் வழங்கப்பட்டிருந்தன, ஏனெனில் அவை தவணைப்பணமாக இனங்காணப்பட்ட ஆண்டில் தலைமை நிறுவனத்தின் உறுதிப்படுத்தலைப் பெற்றன. எனவே, வெளிப்படுத்தப்பட்ட கொள்கையின் வெளிச்சத்தில், இது கொள்கையின் மீறல் அல்ல. | சம்பந்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைக்கு இணங்க முகாமைத்துவம் வருமானத்தை இனங்காண வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தலைமை நிறுவனத்தின் உறுதிப்படுத்தல் மற்றும் அவ்வப்போது பெறுகின்ற முறையான அறிவிப்பு ஆலோசனை ஆவணம் ஆகியவை தாமதமாக பெறப்பட்ட காரணத்தால் காலத்திற்கான தொடர்புடைய மீள் காப்புறுதி தவணை ரூபா.718,436,154 ஆனது 2021 ஆம் ஆண்டிற்கான காலப்பகுதிக்கு இனங்காணப்பட்டிருந்தது. எனவே, ஆண்டுக்கான மீள் காப்புறுதி வருமானமானது ரூபா. 89,679,723 ஆல் குறைவாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. | | |
| (b.) | விகிதாசாரமற்ற ஒப்பந்த மீள் காப்புறுதி ஒப்பந்தத்திற்கான கணக்கீட்டுக் கொள்கையின் படி, ஆண்டுக்கான மொத்த எழுதப்பட்ட தவணை (GWP) ஒப்பந்தத்தின் தொடக்கத்தில் ஏற்கனவே நிறுவப்பட்ட ஒப்பந்த தவணையின் அடிப்படையில் காப்புறுதி தவணை இனங்காணப்பட்டிருந்தது.<br>எவ்வாறாயினும், கணக்கீட்டுக் கொள்கைக்கு மாறாக 2020 ஆம் ஆண்டுக்கு முந்தைய ஆண்டுடன் தொடர்புடைய மீள் காப்புறுதி தவணையான ரூபா.78,341,182 ஆனது மதிப்பாய்விற்கு உட்பட்ட ஆண்டிற்கு இனங்காணப்பட்டிருந்தது. மேலும் ஆண்டுக்கான தொடர்புடைய மீள் காப்புறுதி ரூபா.639,615 ஆனது 2021 ஆம் ஆண்டில் அடையாளங்காணப்பட்டிருந்தது. கணக்கீட்டு கால முடிவில் கிடைக்கக்கூடிய மேலதிக தகவல்கள் மற்றும் மேம்பாடுகளுடன் ஒப்பந்தங்களை மீளாய்வு செய்வதன் மூலம் தேவையான சீராக்கங்கள் செய்யப்படாததால் இது நிகழ்ந்தது. எனவே, மீளாய்விற்கு உட்பட்ட ஆண்டிற்கான வருமானமானது ரூபா.77,701,567 ஆல் அதிகமாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. | மீள்காப்புறுதி தவணைப்பணத்தை இனங்காண்ப்பதற்கான கொள்கை நிதி அறிக்கைகளில் வெளியிடப்பட்டது மேலும் அது கொள்கைக்கு ஏற்ப உள்ளது மற்றும் வினவலில் குறிப்பிடப்பட்டுள்ளபடி முரண்படவில்லை. விலைப்பட்டியல் செய்யப்பட்ட தொகை 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டில் மீள்காப்புறுதிப் பிரிவினால் வழங்கப்பட்டிருந்தன, ஏனெனில் அவை தவணைப்பணமாக இனங்காணப்பட்ட ஆண்டில் தலைமை நிறுவனத்தின் உறுதிப்படுத்தலைப் பெற்றன. எனவே, வெளிப்படுத்தப்பட்ட கொள்கையின் வெளிச்சத்தில், இது கொள்கையின் மீறல் அல்ல. | சம்பந்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைக்கு இணங்க முகாமைத்துவம் வருமானத்தை இனங்காண வேண்டும். |
| (c.) | அமையத்திற்கேற்ற (Facultative) மீள் காப்புறுதி ஒப்பந்தத்திற்கான கணக்கீட்டு கொள்கையின் படி, மீள் காப்புறுதிக்கான தலைமை நிறுவனத்தின் உறுதிப்படுத்தலைப் பெற்ற பிறகு காப்புறுதி தவணை | மீள்காப்புறுதி தவணைப்பணத்தை இனங்காண்ப்பதற்கான கொள்கை நிதி அறிக்கைகளில் வெளியிடப்பட்டது மேலும் அது கொள்கைக்கு ஏற்ப உள்ளது மற்றும் வினவலில் | சம்பந்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைக்கு இணங்க முகாமைத்துவம் வருமானத்தை இனங்காண வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இனங்காணப்பட்டிருந்தது. எனவே, முந்தைய ஆண்டுக்கான தொடர்புடைய மீள் காப்புறுதி தவணையான ரூபா.211,129,506 ஆனது மதிப்பாய்விற்கு உட்பட்ட ஆண்டிற்கு இனங்காணப்பட்டிருந்தது. மேலும் காலத்திற்கான தொடர்புடைய மீள் காப்புறுதி தவணை ரூபா.50,279,153 ஆனது 2021 ஆம் ஆண்டிற்கான காலப்பகுதிக்கு இனங்காணப்பட்டிருந்தது. எனவே, ஆண்டிற்கான வருமானமானது ரூபா.160,850,353 ஆல் அதிகமாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. | குறிப்பிடப்பட்டுள்ளபடி முரண்படவில்லை. விலைப்பட்டியல் செய்யப்பட்ட தொகை 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டில் மீள்காப்புறுதிப் பிரிவினால் வழங்கப்பட்டிருந்தன, ஏனெனில் அவை தவணைப்பணமாக இனங்காணப்பட்ட ஆண்டில் தலைமை நிறுவனத்தின் உறுதிப்படுத்தலைப் பெற்றன. எனவே, வெளிப்படுத்தப்பட்ட கொள்கையின் வெளிச்சத்தில், இது கொள்கையின் மீறல் அல்ல. | |
| (d.) | நிதி அறிக்கை மற்றும் கட்டுப்பாட்டு பொதுப் பேரேட்டுக் கணக்கின் படி உள்நோக்கிய மீள் காப்புறதியிலிருந்து பெற வேண்டிய தவணை ரூபா.1,267,806,451 ஆகும். எவ்வாறாயினும் வயதுப் பகுப்பாய்வின் படி மீதி ரூபா.1,258,772,697 ஆகும். எனவே, வித்தியாசமாக ரூபா.9,033,754 தொகை அவதானிக்கப்பட்டிருந்தது. | அவதானிப்புடன் உடன்படுகிறோம். | முகாமைத்துவம் சரியான நேரத்தில் வேறுபாடுகளைக் கண்டறிந்து, அந்த வேறுபாடுகளை சரிசெய்ய உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |
| (e.) | நிதி அறிக்கையில் உள்ள ஊழியர் இடர் கடன் மீதி மற்றும் கணக்காய்விற்காக சமர்பிக்கப்பட்ட விபரமான அட்டவணை என்பவற்றுக்கடையில் ரூபா.3,537,190 வித்தியாசம் அவதானிக்கப்பட்டிருந்தது. | அவதானிப்புடன் உடன்படுகிறோம். நீண்டகாலமாக நிலுவையில் உள்ள தொடக்க மீதிகளின் பிழைகள் இந்த வேறுபாட்டிற்கு முக்கிய காரணமாகும். இந்த வேறுபாடுகள் மேலதிக நடவடிக்கைகளுக்காக சபையிடம் சமர்ப்பிக்கப்படும் | முகாமைத்துவம் சரியான நேரத்தில் வேறுபாடுகளைக் கண்டறிந்து, அந்த வேறுபாடுகளை சரிசெய்ய உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |
| (f.) | 31 டிசம்பர் 2020 இல் திறைசேரி முறியின் கொண்டு செல்லும் பெறுமதி ரூபா.139 மில்லியன் ஆல் அதிகமாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. நியாயமான பெறுமதியைக் கணக்கிடுவதற்கு நிதியத்தால் பயன்படுத்தப்பட்ட சந்தை விலையில் ஏற்பட்ட பிழை காரணமாக வேறுபாடுகள் ஏற்பட்டுள்ளன. | NITF, மத்திய வங்கியின் பொதுக் கடன் திணைக்களத்தால் சந்தை மதிப்பை அடைவதில் சராசரி விலையைப் பயன்படுத்தி திறைசேரி முறியின் நியாயமான மதிப்பைக் கணக்கிட்டுள்ளது. இருப்பினும், முதலீடு தொடர்பான ஆலோசனை நிறுவனத்தால் நடத்தப்பட்ட விரிவான கணக்காய்வின் படி, சந்தை விலையை அடைவதில் மத்திய வங்கியின் பொதுக் கடன் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட விற்பனை விலையைப் பயன்படுத்த அவர்கள் NITF ஐ பரிந்துரைக்கின்றனர். எனவே, நியாயமான மதிப்பீட்டிற்கான பயன்படும் விலையை NITF மாற்றியுள்ளது. இந்த வேறுபாடு NAO ஆல் சராசரி விலையைப் | பயன்படுத்தப்படும் மதிப்பீட்டு முறையை வெளிப்படுத்தவும், அந்த மதிப்பீட்டு நுட்பத்தை தொடர்ந்து பயன்படுத்தவும் முகாமைத்துவம் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | பயன்படுத்துவதால் ஏற்படுகிறது கொள்கையை மாற்ற உடன்பட்டது. | |
| (g.) 31 டிசம்பர் 2020 இல் திறைசேரி உண்டியலின் கொண்டு செல்லும் பெறுமதி ரூபா.1.08 மில்லியன் ஆல் அதிகமாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. நியாயமான பெறுமதியைக் கணக்கிடுவதற்கு நிதியத்தால் பயன்படுத்தப்பட்ட கூப்பன் விகிதத்தில் ஏற்பட்ட பிழை காரணமாக வேறுபாடுகள் ஏற்பட்டுள்ளன. | NITF, மத்திய வங்கியின் பொதுக் கடன் திணைக்களத்தால் சந்தை மதிப்பை அடைவதில் சராசரி விலையைப் பயன்படுத்தி திறைசேரி உண்டியலின் நியாயமான மதிப்பைக் கணக்கிட்டுள்ளது. இருப்பினும், முதலீடு தொடர்பான ஆலோசனை நிறுவனத்தால் நடத்தப்பட்ட விரிவான கணக்காய்வின் படி, சந்தை விலையை அடைவதில் மத்திய வங்கியின் பொதுக் கடன் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட விற்பனை விலையைப் பயன்படுத்த அவர்கள் NITF ஐ பரிந்துரைக்கின்றனர். எனவே, நியாயமான மதிப்பீட்டிற்கான பயன்படும் விலையை NITF மாற்றியுள்ளது. இந்த வேறுபாடு NAO ஆல் சராசரி விலையைப் பயன்படுத்துவதால் ஏற்படுகிறது. | பயன்படுத்தப்படும் மதிப்பீட்டு முறையை வெளிப்படுத்தவும், அந்த மதிப்பீட்டு நுட்பத்தை தொடர்ந்து பயன்படுத்தவும் முகாமைத்துவம் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |
| (h.) 2019 ஆம் ஆண்டிற்கான செலவுகள் ரூபா.1,598,006 2020 ஆம் ஆண்டில் கணக்கிடப்பட்டிருந்தது. எனவே, ஆண்டிற்கான செலவுகள் அதிகமாகக் குறிப்பிடப்பட்டிருந்தது மற்றும் அந்த ஆண்டிற்கான இலாபம் அதே அளவால் குறைவாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. | 2019 உடன் தொடர்புடைய இந்த அட்டுருச் செலவுகள், 2019 இல் செலவினங்களாக பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். தவறாகப் 2020 இல் பதிவு செய்திருக்கிறது. எவ்வாறாயினும், LKAS 08 இன் பந்தி 06, கணக்கியல் கொள்கைகள், கணக்கியல் மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் பிழைகள் ஆகியவற்றின் படி, இந்த தவறான அறிக்கையானது பயனர்களின் பொருளாதார முடிவுகளில் தாக்கத்தை ஏற்படுத்தாது (பொருண்மையற்றது), இந்த பிழையை 2019 இல் மீண்டும் கூற வேண்டிய அவசியமில்லை. | அட்டுரு அடிப்படையில் நிதி அறிக்கைகளைத் தயாரிப்பதற்கு பொருத்தமான செயல்முறைகள் இருப்பதை முகாமைத்துவம் உறுதி செய்ய வேண்டும். |
| (i.) ரூபா.123,387,679 ஆனது 2017/2018 ஆம் ஆண்டிற்கான தேசிய இயற்கைப் பேரிடர் காப்புறுதித் திட்டத்தின் (NNDIS) சீராக்க தவணை காரணமாக மீள் காப்புறுதி ஒப்பந்தங்களில் இருந்து மீள் காப்புறுதி பொறுப்புக்கள் ஏற்பட்டன. மற்றும் 2018/2019 ஆண்டிற்கான நிதியத்தில் காப்புறுதி செய்யப்பட்ட இடருக்கான (Retrocession) மீள் காப்புறுதி சீராக்க தவணை ரூபா.466,292,684 தொகையானது நிதி அறிக்கைகளில் | அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்ட 2018/19 ஆம் ஆண்டிற்கான NNDIS இன் நீட்டிக்கப்பட்ட காலத்திற்கான குறைந்தபட்ச வைப்பு தவணைக்கட்டணம் இலங்கை ரூபா.401,153,424 ஆனது 2019 இல் இனங்காணப்பட்டது.<br>எவ்வாறாயினும், 2018/2019 ஆண்டிற்கான நிதியத்தில் காப்புறுதி செய்யப்பட்ட இடர் (Retrocession) மற்றும் NNDIS சீராக்க தவணை இலங்கை | அந்த ஒப்பந்தங்களின் விதிமுறைகளிலிருந்து எழும் பொறுப்புகளை அடையாளம் காண்பதற்கு முகாமைத்துவமானது ஒவ்வொரு அறிக்கையிடல் காலத்தின் முடிவிலும் இருக்கும் ஒப்பந்தங்களை மறுஆய்வு செய்து, அதற்கேற்ப கணக்கை மேற்கொள்ள வேண்டும். |

| | | |
|---|---|---|
| இனங்காணப்பட்டிருக்கவில்லை. | ரூபா.589,680,363 தொகையானது, அமைச்சரவையால் அங்கீகரிக்கப்படவில்லை இது 2021 ஆம் ஆண்டு வரையிலான நிதி அறிக்கைகளில் வழங்கப்படவில்லை, ஏனெனில் இந்த பொறுப்பை ஏற்றுக்கொள்வது கேள்விக்குரியது. அதன்பிறகு, டிசம்பர் 2021 இல் தலைமை சட்டமா அதிகாரியின் கருத்தைப் பெற்ற பிறகு, NITF பொறுப்பானது IRCSL இன் உடன்பாடு மற்றும் ஒப்புதல் மற்றும் சிறப்பு அமைச்சரவை ஒப்புதலுக்கு உட்பட்டு சாத்தியமாகும். இருப்பினும், மதிப்பாய்வின் கீழ் உள்ள காலத்திற்கான நிதி முடிவுகளில் எந்த தாக்கமும் இல்லை. | |

### 1.5.4 பொருத்தமற்ற விலைமதிப்பு அல்லது மதிப்பீடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (a.) ஐந்தொகை திகதியில் உள்ள வெள்ளம் அல்லாத உரிமைக்கோரல்களுக்கான நீண்ட நிலுவையிலுள்ள ஒதுக்கீடுகளுக்கான சரியான மதிப்பீட்டை நிதியம் மேற்க்கொள்ளாததால் ஒதுக்கீட்டின் துல்லியத்தை உறுதி செய்து கொள்ள முடியாது. வெள்ளம் அல்லாத உரிமைக்கோரல்களுக்கான ஒதுக்கீடு ரூபா.427,550,703 ஆனது இரண்டு முதல் ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையில் உள்ளது மற்றும் ரூபா.156,589,534 தொகையான ஒதுக்கீடுகள் ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையில் உள்ளது. | இருப்பினும், பின்னர், சம்பந்தப்பட்ட காப்புறுதிக் கம்பனிகளின் உறுதிப்படுத்தல்களைப் பெறுவதன் மூலம், கணிசமான அளவு நீண்ட கால நிலுவைத் தொகையானது, வெள்ளம் அல்லாத உரிமைக்கோரல்களுக்கான ஏற்பாட்டிலிருந்து நீக்கப்பட்டது. | முகாமைத்துவம் நீண்டகால நிலுவைகளை மதிப்பீடு செய்து, அந்த நிலுவைகளை நீக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் |
| (b.) 21 டிசம்பர் 2012 இன் வர்த்தமானி இலக்கம் 1791/4 இன் படி, பொது (ஆயுள் அல்லாத) மீள் காப்புறுதிக்கு 30 சதவிகிதம் கட்டாயக் கூறாகும். இருப்பினும், நிதியம் 100 சதவீத இழப்பை ஒரு ஏற்பாடாக ஒதுக்கியது. எனவே, மீளாய்விற்கு உட்பட்ட ஆண்டிற்கான மீள் காப்புறுதி ஒதுக்கீடு ரூபா.7,210,000 ஆல் அதிகமாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. | அவதானிப்புடன் உடன்படுகிறோம். இருப்பினும், அந்த வழுக்கள் பின்னர் சரிசெய்யப்பட்டன. | விதிகளின் பொருத்தமான தன்மையை முகாமைத்துவம் முறையாக மதிப்பாய்வு செய்ய வேண்டும். |
| (c.) 05 ஒக்டோபர் 2016 வரை எந்தப் பொறுப்பும் இல்லை என்று காப்பீட்டாளர் தெரிவித்தாலும் செலுத்த வேண்டிய மீள் காப்புறுதி ரூபா.801,513 தொகையானது இன்னும் நிதி அறிக்கைகளில் உள்ளது. | அவதானிப்புடன் உடன்படுகிறோம். இந்த உரிமைகோரல் 2021 நிதியாண்டில் அகற்றப்பட்டது | முகாமைத்துவம் ஒவ்வொரு அறிக்கையிடல் காலத்தின் முடிவிலும் மீள்காப்புறுதியின் |

| | | |
|---|---|---|
| | | பொறுப்பை மதிப்பீடு செய்து அதற்கேற்ப சீராக்கங்களைச் செய்ய வேண்டும். |
| (d.) 2020 முடிவடைந்த ஆண்டிற்கான அக்ரஹார உரிமைக்கோரல்களின் ஏற்பாடு ரூபா.510,530,810 தொகைக்கான மதிப்பிடப்பட்ட ஒதுக்கீட்டின் நியாயத்தன்மையை நிரூபிக்க சபை ஒப்புதல், ஆயுட்கால மதிப்பீடு அல்லது வேறு எந்த ஆவணங்களும் வழங்கப்பட்டிருக்கவில்லை. | அக்ரஹார உரிமைகோரலின் தலைவரிடம் இருந்து அக்ரஹாரவிற்கான உரிமைகோரல் ஒதுக்கீட்டின் மதிப்பீடு பெறப்பட்டது. எனவே, உரிமைகோரல் துறை அனுபவம் மற்றும் தீர்ப்பு 2020 ஆம் ஆண்டின் இறுதியில் செய்யப்பட்ட ஏற்பாட்டின் அடிப்படையில் அமைந்துள்ளது. இது, கோவிட் 19 இன் தாக்கம் காரணமாக ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் கட்டமைக்கப்பட்ட உரிமைகோரல்களின் தேக்கம் தொடர்பாக நிதி அறிக்கைகளில் செய்யப்பட்ட கூடுதல் ஏற்பாடு ஆகும். இந்த உரிமைகோரல் ஏற்பாடு அறிக்கையிடப்பட்ட உரிமைகோரல்களுடன் தொடர்புடையது என்பதை நினைவில் கொள்ளவும், எனவே, உண்மையான மதிப்பீடுகள் தேவையில்லை. உண்மையில், IBNR இன் மதிப்பீட்டைச் செய்யும்போது இந்த ஒதுக்கீட்டு உருப்படியை ஆயுட்கால அறிக்கை கருத்தில் கொண்டுள்ளது. ஒவ்வொரு பிரிவு ஏற்பாடுகளின் உருப்படிகளையும் சபையிடம் சமர்ப்பிப்பது நடைமுறை இல்லை, அதற்குப் பதிலாக 2020 ஆம் ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் அங்கீகரிக்கப்பட்டபோது, அக்ரஹார உரிமைகோரல் ஏற்பாடு சபைக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது. | முகாமைத்துவம் ஒவ்வொரு அறிக்கையிடல் காலத்திலும் ஏற்பாடுகளின் நியாயத்தன்மையை மதிப்பிட்டு அதற்கேற்ப கணக்கீடு செய்ய வேண்டும், மற்றும் கணக்காய்விற்கான தகவலை வழங்க வேண்டும். |
| (e.) 2020 ஆம் ஆண்டிற்கான மோட்டார் உரிமைக்கோரல்களின் செலுத்த வேண்டிய நிலுவை ரூபா.10,323,235 தொகைக்கான எந்த மதிப்பீடும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை இது மதிப்பாய்வின் கீழ் உள்ள ஆண்டிற்கான எந்த மதிப்பீடும் இல்லாமல் 2019 ஆம் ஆண்டு முதல் தொடரப்பட்டது. | நீண்ட நிலுவையில் உள்ள இந்த SRCC உரிமைகோரல்கள் முந்தைய ஆண்டுகளில் தெரிவிக்கப்பட்டு தொடர்புடைய குழுக்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இருப்பினும், தீர்ப்பனவுக்காக ஆவணங்கள் நிலுவையில் இருப்பதால், இந்த மீதிகள் நீண்ட கால நிலுவைத் தொகை மீதிகளாகும். தீர்ப்பனவு மற்றும் அவசியமான ஒப்புதல்களுக்கான தேவைக்கான உறுதிப்படுத்தலைப் பெற்ற பிறகு, நாங்கள் ஏற்பாட்டினை மாற்றியமைப்போம். | முகாமைத்துவம் ஒவ்வொரு அறிக்கையிடல் காலத்திலும் பொறுப்புகளின் நியாயத்தன்மையை மதிப்பிட வேண்டும் மற்றும் அதற்கேற்ப கணக்கீடு செய்ய வேண்டும். |

### 1.5.5 கணக்காய்விற்கு உரிய ஆவணச் சான்றின் கிடைப்பனவு அற்றதன்மை

| விடயம் | தொகை (ரூபா) | கிடைப்பனவு அற்ற ஆவணச் சான்று | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (a.) பெற வேண்டிய ஊழியர் கடன் | 54,274,121 | கடன் பதிவேடு | ஊழியர் கடன் பதிவேடு ஏற்கனவே 30 ஜூன் 2022 அன்று மின்னஞ்சல் செய்யப்பட்டுள்ளது | பயனுறுதி வாய்ந்த கணக்காய்வுச் செயல்பாட்டிற்கு சரியான நேரத்தில் தகவல் கிடைப்பதை முகாமைத்துவம் உறுதி செய்ய வேண்டும். |
| (b.) பெற வேண்டிய வருமான வரி | 22,465,243 | வரிக் கணக்கிடல் மற்றும் உறுதிப்படுத்தல்கள் | ரூபா.1,220,442,752 தொகையான மொத்த வருமான வரி கணிப்பீட்டை நாங்கள் வழங்கியிருக்கிறோம். எனவே, ரூபா.22,465,243 என்பது குறைமதிப்பீடு என்று கூற முடியாது. எவ்வாறாயினும், குறுக்குவெட்டுகளைப் பொறுத்தவரை, SRCC பிரிவு மட்டுமே வருமான வரிப் பொறுப்பைக் கொண்டுள்ளது மற்றும் மற்ற பிரிவுக்கு வரி நட்டங்கள் முன்னோக்கி கொண்டு செல்லப்படுகின்றன. | |
| (c.) விவசாய காப்புறுதித் திட்டத்திற்கான மீள் காப்புறுதி தவணை | 148,380,847 | பெறுவனவு மற்றும் கொடுப்பனவு விபரங்கள் | நிதியமைச்சின் கோரிக்கைக்கு பதிலளிக்க தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ள முன்னாள் தலைமை நிறைவேற்று அதிகாரியிடம் கோப்பை ஒப்படைத்ததன் காரணமாக கோப்பு கிடைப்பனவு அற்றதாக உள்ளது. 16/12/2019 அன்று தலைமை நிறைவேற்று அதிகாரிக்கு எதிராக தடைக் கடிதம் வழங்கப்பட்டது, மேலும் அவர் NITF வளாகத்திற்குள் நுழைய தடை விதிக்கப்பட்டது. எனவே, NITF முகாமைத்துவத்திற்கு அவர் பிடியில் உள்ள கோப்புகளை அணுக முடியாதிருக்கிறது. அவர் முதலில் விடுபட்டிருந்தாலும், கோரப்பட்ட சான்றுகள் மற்றும் தேவைப்படும் போது வேறு எந்த தகவலையும் வழங்கும் நிலையில் NITF உள்ளது என்பதை நினைவில் கொள்ளவும். | |

## 1.6 பெற வேண்டியவைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பெற வேண்டிய மீள் காப்புறுதி தவணை ரூபா. 142,595,979 தொகையானது ஒரு (01) வருடத்திற்கு மேலாக நிலுவையில் உள்ளது. இது பெற வேண்டிய மொத்த மீள் காப்புறுதி தவணையிலிருந்து 11.3% ஐ பிரதிநிதித்துவப்படுத்துகிறது. மற்றும் ரூபா. 148,466,031 தொகையானது இரண்டு (02) வருடத்திற்கு மேலாக நிலுவையில் உள்ளது. இது பெற வேண்டிய மொத்த தொகையிலிருந்து 11.8% ஐ பிரதிநிதித்துவப்படுத்துகிறது. ரூபா. 151,033,057 தொகையானது மூன்று (03) வருடத்திற்கு மேலாக நிலுவையில் உள்ளது. இது மொத்த நிலுவைத் தொகையிலிருந்து 12% ஐ பிரதிநிதித்துவப்படுத்துகிறது. நீண்டகாலமாக நிலுவையில் உள்ள பெற வேண்டிய மீள் காப்புறுதி மீதிகளை மீட்பதற்கு போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | 31/12/2021 நிலுவை மீதியின் வயது நிலைகள் பின்வருமாறு. எனவே, 3 ஆண்டுகளுக்கும் மேலான மீதிகள் 89% மீட்டெடுக்கப்பட்டு 16 மில்லியனாக இருந்தது. | நிலுவைத் தொகையை வசூலிக்க முகாமைத்துவம் தேவையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் பற்றிய குறிப்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (a.) 2000 இன் 43 ஆம் இலக்க காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தும் சட்டத்தின் பிரிவு 7, 31(2) மற்றும் 49 | அறுபத்தொரு (61) காலாண்டு திரும்பல்கள் அதன் சார்பாக உருவாக்கப்பட்ட விதிகளாகத் கொண்ட தகவல்களை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணையத்திடம் சமர்ப்பிக்க வேண்டும். எவ்வாறாயினும் கோவிட் 19 தொற்றுநோய் காரணமாக காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட நீட்டிப்புக்களைக் கருத்தில் கொண்ட பிறகு 38 முதல் 285 நாட்கள் தாமதத்துடன் 16 காலாண்டு திரும்பல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | ஒரு வருடத்திற்காக IRCSL க்கு 04 காலாண்டு திரும்பல்கள் மட்டுமே சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதை நினைவில் கொள்ளவும். இந்த தாமதங்கள் அனைத்தும் பயணக் கட்டுப்பாடுகள், பொது முடக்கங்கள், சோதனை செய்யப்பட்ட நேர்மறை எண்ணிக்கையிலான ஊழியர்களின் சம்பவங்கள் போன்ற கோவிட் 19 தொற்றுநோயின் காரணமாக ஏற்பட்டதாகும். மேலும் தற்போதுள்ள அமைப்புகள் இணைய அடிப்படையிலானவை அல்ல என்பதால், கணக்குகளைத் தயாரிப்பதற்குப் பணிக்கு அறிக்கையிடுவது அவசியம் என்பதை நினைவில் கொள்ளவும். இருப்பினும், இந்த | ஒழுங்குமுறைப்படுத்தல் வருமானங்களை சமர்ப்பிப்பதில் எதிர்கால தாமதங்களைத் தவிர்க்க முகாமைத்துவம் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | தாமதங்கள் குறித்து IRCSL க்கு அவ்வப்போது காரணங்கள் மற்றும் சமர்ப்பிப்பதற்கான சாத்தியமான திகதியுடன் தெரிவிக்கப்பட்டது. இந்த தாமதங்களை போக்க ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (b.) 2006 இன் 28 ஆம் இலக்க தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியச் சட்டத்தின் பிரிவு 13(e) | சட்ட ஏற்பாடுகளின் படி, நிதியம் தொடர்பாக ஒரு பொதுவான கணக்கும் மற்றும் ஒவ்வொரு உறுப்பினர்களுக்கும் பிரிக்கக் கூடிய தனியான கணக்கும் பேணப்பட வேண்டும். இருப்பினும், தனிப்பட்ட உறுப்பினர்களுக்கான பிரிக்கக் கூடிய தனியான கணக்குகள் நிதியத்தால் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. | தனிப்பட்ட கணக்கு விவரங்கள் தகவல் அமைப்பில் பராமரிக்கப்படுகின்றன. கட்சிக்காரர் NIC ஐப் பயன்படுத்தி அவற்றை அணுகுதல் சாத்தியமாகும். | நிதியமானது சட்டத்தின் பொருந்தக்கூடிய விதிகளுக்கு இணங்க வேண்டும். |
| (c.) 2006 இன் 28 ஆம் இலக்க தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியச் சட்டத்தின் பந்தி 23 | சட்ட ஏற்பாடுகளின் படி, அத்தகைய காப்புறுதி கம்பனிகள் துல்லியமாக நிதியத்திற்கு திரட்டப்பட்ட தொகையை விலைப்பட்டியலிட்டு அனுப்பியுள்ளதா என்பதை உறுதிப்படுத்துவதற்காக காப்புறுதிக் கம்பனியின் பதிவுகளை ஆய்வு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை நிதியம் எடுக்கவில்லை. | வழக்கமாக, உள்ளக கணக்காய்வுப் பிரிவு காப்புறுதிக் கம்பனிகளின் வருமான சரிபார்ப்பை மேற்கொள்கிறது. இருப்பினும், கோவிட் தொற்றுநோய் காரணமாக, இந்த சரிபார்ப்பு செயல்படுத்தப்படவில்லை. | நிதியமானது சட்டத்தின் பொருந்தக்கூடிய விதிகளுக்கு இணங்க வேண்டும். |
| (d.) நிதி ஒழுங்குவிதிகள் 261(1) | கொடுப்பனவுக் கைச்சாத்தின் தொடர் வரிசை முறை ஒழுங்காக பேணப்பட்டிருக்கவில்லை. | நாங்கள் அவதானிப்பைக் குறித்துக்கொண்டோம். நிதி அறிக்கைகளுக்கான காலக்கெடு பிப்ரவரி 28 ஆக இருந்ததால், அட்டுரு செலவுகளுக்கான துண்டிப்பை ஏறத்தாழ 2020 ஜனவரி 15 எடுத்தோம். இணைக்கப்பட்ட அனைத்து செலவுகளும் ஜனவரி 2022 இறுதியில் செய்யப்பட்டன. | கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களை தொடர் வரிசையில் பராமரிக்க முகாமைத்துவம் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |
| (e.) நிதி ஒழுங்குவிதிகள் 386(7) | காசோலைகள் ரத்துச் செய்யப்பட்டாலும் கூட அது அடியிதழோடு பொருத்தப்பட்டு காசோலைப் புத்தகத்தில் தக்கவைக்கப்பட வேண்டும். நிதியமானது கொடுப்பனவுக் கைச்சாத்தோடு காசோலை அடியிதழை இணைத்திருக்கிறது. இதன் விளைவாக, உறுச்சீட்டு ஏதேனும் இடம் தவறி விட்டால் ரத்துச் செய்யப்பட்ட | அச்சிடும் நோக்கங்களுக்காக NITF தொடர்ச்சியான காசோலைச் சுருளைப் பயன்படுத்துவதால், காசோலை அடியிதழை தனித்தனியாக கோப்பு செய்வது நடைமுறையில் சாத்தியமில்லை. எனவே, கொடுப்பனவுக் கைச்சாத்துடன் காசோலை அடியிதழ் இணைக்கப்பட்டு, கோப்பு செய்யப்படுகிறது. உறுதிச்சீட்டு ஏதேனும் தவறி விட்டால், | முகாமைத்துவம் நிதிப் பிரமாணத்தில் உள்ள தேவைப்பாடுகளை கடைபிடிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காசோலைகள் தொடர்பான அனைத்து விபரங்களும் தொலைந்து போகலாம். | அனைத்து விவரங்களும் ACCPAC அமைப்பில் கிடைக்கும், அங்கு இடுகையிட்ட பிறகு எந்த உறுதிச்சீட்டு விவரங்களையும் மாற்ற முடியாது. இருப்பினும், ரத்து செய்யப்பட்ட காசோலைகள் அடியிதழில் ஒட்டப்பட்டுள்ளன. | |
| (f.) நிதி ஒழுங்குவிதிகள் 395(b) | வங்கி இணக்கக் கூற்று சம்மந்தப்பட்ட பணம் செலுத்தும் அதிகாரியால் சான்றளிக்கப்பட வேண்டும், மற்றும் ஆய்வுக்காக கணக்காய்விற்கு கிடைப்பனவு உள்ளதாக இருக்க வேண்டும். எவ்வாறாயினும், பதினொரு (11) வங்கிக் கணக்குகளுக்காக தயாரிக்கப்பட்ட வங்கி இணக்கக் கூற்றுக்கள் பெயர், பதவி மற்றும் திகதி இல்லாமல் சான்றளிக்கப்பட்டிருந்தன. | வங்கி இணக்கக் கூற்றுக்களானது, யாரால் தயாரிக்கப்பட்டது, சரிபார்க்கப்பட்டது, சான்றுபடுத்தப்பட்டது என்பவைக்காக வங்கி இணக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள தற்போதைய கையொப்ப இடத்திற்கான பெயர், பதவி மற்றும் திகதியுடன் பொறுப்பான அதிகாரியை உள்ளடக்கும் வகையில் திருத்தப்படும். | முகாமைத்துவம் நிதிப் பிரமாணத்தில் உள்ள தேவைப்பாடுகளை கடைபிடிக்க வேண்டும். |
| (g.) நிதி ஒழுங்குவிதிகள் 396 | காசோலை வழங்கப்பட்ட நாளிலிருந்து ஆறு மாதங்களுக்கு மேலாக பணமாக்கப்படாமல் இருப்பதற்காக நிதி ஒழுங்குவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. ரூபா.3,501,599 தொகையான அறுபத்தொரு (61) காலாவதியான காசோலைகள் இரண்டு (02) வங்கிக் கணக்குகளில் 31 ஜனவரி 2021 இல் காணப்பட்டது அவதானிக்கப்பட்டிருந்தது. | இந்த சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் அக்ரஹாரா மற்றும் மோட்டார் உரிமைகோரல் கொடுப்பனவுகளுடன் தொடர்புடையவை. NITF தற்போது வாடிக்கையாளர்களுக்கு பதிவு தபால் மூலம் நினைவூட்டல்களை அனுப்புகிறது. அவர்களின் பதிலின் அடிப்படையில், நாங்கள் சமர்ப்பிக்கப்படாத காசோலைகளின் தொகையை வருமானத்திற்கு எடுத்துக்கொள்வோம் அல்லது செல்லுபடியாகும் காலத்தை நீட்டிப்போம். | முகாமைத்துவம் நிதிப் பிரமாணத்தில் உள்ள தேவைப்பாடுகளை கடைபிடிக்க வேண்டும். |
| (h.) 2015 மே 25 ஆம் திகதியிடப்பட்ட பீஈடி 2/2015 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் பிரிவு 4 | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் படி, கையடக்கத் தொலைபேசிகள் கொள்வனவு செய்வதற்கான செலவை அதிகாரிகள் தனிப்பட்ட முறையில் ஏற்க வேண்டும். இருப்பினும், நிதியமானது ஊழியர்களுக்கான கையடக்கத் தொலைபேசிகளை 2016 முதல் 2020 வரை ரூபா.2,432,371 செலவு | வணிகத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக NITF கையடக்கத் தொலைபேசிகளை கொள்வனவு செய்து அதன் சொத்துக்களாகப் பதிவுசெய்துள்ளது (இருப்புக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது) மற்றும் பயன்பாட்டிற்காக ஊழியர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. மற்றும் வேலையை விட்டு விலகும் போது அல்லது காலத்தின் முடிவில் ஒதுக்கப்பட்ட கையடக்கத் தொலைபேசிகளை | முகாமைத்துவம் சுற்றறிக்கையில் உள்ள தேவைப்பாடுகளை கடைபிடிக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| செய்வதன் மூலம் கொள்வனவு செய்திருந்தது. | NITF க்கு திருப்பி அனுப்ப வேண்டும் என்பதை குறித்துக் கொள்க. எனவே, இது தனியார் கையடக்கத் தொலைபேசிகளின் மீள்நிரப்புதல் அல்ல. சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. | |

**1.8 முதலீட்டு நடவடிக்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (a.) முதலீட்டுக் கொள்கையின் பந்தி 13 இல் முதலீட்டு முகாமையாளரின் வகிபாகம் வரையறுக்கப்பட்டிருந்தாலும் 30 ஆகஸ்ட் 2020 முதல் இந்த பதவி வெற்றிடமாக உள்ளது. | முதலீட்டு முகாமையாளரைப் பணியமர்த்துவதன் முக்கியத்துவத்தை நாங்கள் உணர்ந்துள்ளோம். எவ்வாறாயினும், 20.11.2019 அன்று வெளியிடப்பட்ட நிதி அமைச்சின் சுற்றறிக்கையின்படி, ஆட்சேர்ப்பு தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதால், முதலீட்டு முகாமையாளர் வெற்றிடத்தை நிரப்ப முடியாது. | நிதிகளின் முதலீடு திறம்பட செயல்படுவதை முகாமைத்துவம் உறுதி செய்ய வேண்டும். |
| (b.) முதலீட்டுக் கொள்கையின் பந்தி 17 இன் படி, முதலீட்டுக் குழு அவ்வப்போது கூட வேண்டும் என்றாலும் மற்றும் முதலீட்டுக் குழுவின் பொறுப்புக்கள் வரையறுக்கப்பட்டிருந்தது என்றாலும். எவ்வாறாயினும், மதிப்பாய்வின் கீழ் உள்ள ஆண்டிற்கு முதலீட்டுக் குழு கூடியிருக்கவில்லை. | 2020 இல், முதலீட்டு முகாமையாளர் பதவியின் வெற்றிடம் மற்றும் கோவிட் தொற்றுநோய் ஆகியவற்றால் முதலீட்டுக் குழு கூட்டப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், பொது முயற்சிகள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட அரசுக்கு சொந்தமான நிறுவனங்களுக்கான செயல்பாட்டுக் கையேட்டின் படி, குறைந்தபட்சம் ஆண்டுக்கு ரூபா. 30 பில்லியன் நிலையான வருமானம் கொண்ட அரசுக்கு சொந்தமான நிறுவனங்களின் சபைகள் கடந்த இரண்டு ஆண்டுகளில் இயக்குனர்கள் குழுவால் நிறுவப்பட்ட முதலீட்டுக் கொள்கைக்கு ஏற்ப முதலீட்டுக் குழுவை (IC) கட்டாயம் நிறுவ வேண்டும். இருப்பினும், NITF அந்தத் தேவைப்பாட்டின் கீழ் வராது. | முதலீட்டுக் குழுவின் திறம்பட செயல்பாட்டிற்கு முகாமைத்துவம் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |
| (c.) முதலீட்டுக் கொள்கையை வழக்கமான அடிப்படையில் மீளாய்வு செய்ய முதலீட்டுக் கொள்கையில் எந்த ஏற்பாடும் இல்லை. மேலும், முதலீட்டுக் கொள்கையானது அதன் அமுலாக்கத்திற்குப் பிறகு சபையால் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. மற்றும் சரியான நேரத்தில் கொள்கையில் தேவையான மேம்பாடுகளை இணைத்திருக்கவில்லை. | முதலீட்டுக் குழுவை இணைத்த பிறகு முதலீட்டுக் கொள்கை எதிர்காலத்தில் மதிப்பாய்வு செய்யப்படும். | முதலீட்டுக் கொள்கையை வழக்கமான அடிப்படையில் மதிப்பாய்வு செய்ய முகாமைத்துவம் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (d.) | முதலீட்டுக் கொள்கையின் படி, பொருளாதார நிலைமைகள், வட்டி வீதங்களின் நடத்தை, எதிர்காலப் போக்குகள் மற்றும் நிதியத்தின் செயல்பாட்டு காசுப்பாய்ச்சல் தேவை ஆகியவற்றின் மதிப்பீட்டின் அடிப்படையில் முதலீடுகளை தேர்ந்தெடுக்கிறது. எவ்வாறாயினும், முதலீட்டு முடிவுகளை விவேகமான முறையில் எடுப்பதற்காக அதிகப்படியான காசுப்பாய்ச்சல் மற்றும் அந்த காசுப்பாய்ச்சல்களின் நேரத்தை அடையாளம் காண்பதற்கு காசுப்பாய்ச்சல் முன்கணிப்புக்கள் எதுவும் தயாரிக்கப்படவில்லை. | ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு காசுப்பாய்ச்சல் தயாரிக்கப்படவில்லை. NITF வணிகத்தின் தன்மையைப் பொறுத்து, திரவத்தன்மைத் தேவைப்பாடு மற்றும் நிதி இருப்பு ஆகியவை காலம் மற்றும் தொகை பற்றிய முதலீட்டு முடிவை எடுப்பதற்கு முன் தினமும் கண்காணிக்கப்படும். எனவே, காசுப்பாய்ச்சல் முன்கணிப்பின் அடிப்படையில் அல்லாமல் உண்மையான உருப்படிகளின் அடிப்படையில் முடிவுகள் எடுக்கப்படுகின்றன. தினசரி மீதி மற்றும் முதலீட்டு அறிக்கையின் அடிப்படையில் தினசரி பண இருப்பு மற்றும் அதிகப்படியான நிதி அடையாளங்காணப்படுகிறது. | எதிர்கால காசுப்பாய்ச்சல்கள் மற்றும் முதலீட்டு முடிவுகளை விவேகமான முறையில் எடுக்கும் நேரத்தைக் கண்டறிய காசுப்பாய்ச்சல் முன்கணிப்பைத் தயாரிக்க முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (e.) | நிதியத்தின் நிதிச் சொத்துக்கள் (முதலீடுகள்) ரூபா. 21,666,072,511 தொகையாகும் மற்றும் இது நிதியத்தின் மொத்தச் சொத்துக்களில் 79% ஐ பிரதிநிதித்துவப்படுத்தியது. எவ்வாறாயினும் முதலீட்டு முடிவுகளுக்கான நிதி அதிகாரத்தின் பிரதிநிதித்துவமானது முதலீட்டுக் கொள்கையில் முதலீடுகளின் பெறுமதி மற்றும் முதலீடுகளின் மூலங்களின் அடிப்படையில் வரையறுக்கப்படவில்லை. முதலீடுகளின் பெறுமதி மற்றும் மூலங்களைப் பொருட்படுத்தாமல் அனைத்து முதலீடுகளும் முதலீட்டுக் குழுவால் மட்டுமே அங்கிகரிக்கப்பட்டன. | தினசரி முதலீட்டு முடிவுகள் எடுக்கப்பட வேண்டும் என்பதால், நிதி அதிகாரத்தின் பிரதிநிதித்துவத்தின் கீழ், சபை அதன் அதிகாரத்தை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் முதலீட்டுக் குழுவிடம் ஒப்படைத்தது. | முதலீட்டு நடவடிக்கைகளின் பயனுறுதிமிக்க செயல்பாட்டிற்காக முதலீட்டின் மதிப்பு மற்றும் முதலீட்டு வளங்களின் அடிப்படையில் முகாமைத்துவம் நிதி அதிகாரத்தை வழங்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா. 7,526,099,442 இலாபமாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா. 3,114,086,727 ஆக காணப்பட்டதால் நிதி விளைவுகளில் ரூபா. 4,412,012,715 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது தேறிய உழைத்த தவணைப்பணத்தில் ஏற்பட்ட ரூபா. 1,027,001,050 அதிகரிப்பும், தேறிய நலன் மற்றும் உரிமைக்கோரல் செலவுகளில் ஏற்பட்ட ரூபா.

4,124,801,551 குறைவும் மற்றும் எழுதப்பட்ட மற்றும் தேறிய கையகப்படுத்தல் செலவில் ஏற்பட்ட ரூபா. 440,830,904 குறைவும் முன்னேற்றத்திற்க்கான காரணங்களாகும்.

### 2.2 பிரதான வருமான செலவின விடயங்கள் தொடர்பான போக்கு பகுப்பாய்வு

| ஆண்டு | 2020 | 2019 | வேறுபாடு ரூபா. | வேறுபாடு விகிதாசாரத்தில் |
|---|---|---|---|---|
| தேறிய உழைத்த தவணைப்பணம் | 17,475,027,816 | 16,448,026,766 | 1,027,001,050 | 6% |
| ஏனைய வருமானம் | 1,387,023,110 | 1,269,216,686 | 117,806,424 | 9% |
| தேறிய நலன் மற்றும் உரிமைக்கோரல்கள் | (7,954,516,263) | (12,079,317,814) | (4,124,801,551) | -34% |
| எழுதப்பட்ட மற்றும் தேறிய கையகப்படுத்தல் செலவு | (1,614,860,946) | (2,055,691,850) | 440,830,904 | -21% |
| ஏனைய செயற்பாட்டு மற்றும் நிர்வாகச் செலவு | (409,175,576) | (552,685,117) | 143,509,541 | -26% |
| வருமான வரி | (1,339,826,929) | 105,600,661 | -1,445,427,590 | -1,369% |
| ஆண்டிற்கான இலாபம் | 7,526,099,442 | 3,114,086,727 | 4,412,012,715 | 142% |

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

கணக்காய்வுக்கு கிடைத்த நிதி அறிக்கைகள் மற்றும் தகவல்களின் படி, கடந்த மூன்று ஆண்டுகளுக்கான சில முக்கிய விகிதங்கள் பின்வருமாறு.

| விகிதம் | 2020 | 2019 | 2018 |
|---|---|---|---|
| தக்க வைப்பு விகிதம் | 161% | 143% | 138% |
| மொத்த உரிமைக்கோரல் விகிதம் | 46% | 60% | 72% |
| செலவு விகிதம் | 12% | 16% | 16% |
| ஒருங்கிணைந்த விகிதம் | 57% | 76% | 87% |
| வருமான வளர்ச்சி | 6% | 18% | 18% |
| இலாப விகிதம் | 90% | 24% | 34% |
| தேறிய இலாபம் | 40% | 18% | 21% |
| சொத்து மீதான திரும்பல் விகிதம் | 37% | 17% | 19% |
| உரிமை மீதான திரும்பல் விகிதம் | 83% | 43% | 47% |
| திரவ விகிதம் | 1.2 | 0.68 | 0.74 |
| நடைமுறை விகிதம் | 6.26 | 8.92 | 9.34 |
| மொத்தச் சொத்துக்களுக்கு நிதிச் சொத்துக்கள் | 82% | 77% | 76% |
| சொத்துப் புரள்வு | 1.34 | 2.46 | 2.17 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (a.) தரவுப் பிடிப்பு தொடர்பாக ஆயுட்கால கணிப்பாளர் வழங்கிய பரிந்துரைகள், வணிகத்தின் முக்கிய வகுப்பைப் பிரித்தல், உரிமைக்கோரல் எண்ணிக்கையை வழங்குதல் மற்றும் உரிமைக்கோரல் கையாளுதல் செலவு ஆகியவை நிதியத்தின் தரவு நம்பிக்கை அளவை அதிகரிக்க தேவையான மேம்பாடுகளைச் செய்வதற்கு சபை மட்டத்திலோ அல்லது முகாமைத்துவத்தின் பொருத்தமான மட்டத்திலோ விவாதிக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது, OS மதிப்புகளை வைத்திருப்பது கணக்காய்வு செய்யப்பட்ட எண்களுடன் ஒத்துப்போகிறது. மேலும், 2021 முதல், NITF ஆனது நிறுவனத்தின் குறிப்பிட்ட மறைமுக உரிமைகோரல் செலவுகளை மதிப்பிடுவதற்கு அதன் உரிமைகோரல் கையாளுதல் செலவினங்களை வழங்குவதற்கான NITF அனுபவத்தைப் பின்பற்றியது மற்றும் தொழில் அனுபவத்தைப் பயன்படுத்துவதில்லை. NITF இன் வணிகங்களின் இயல்பு, எடுத்துக்காட்டாக, மீள்காப்புறுதி மற்றும் SRCC விடயங்கள் என்பதால் மற்ற பரிந்துரைகளில் பெரும்பாலானவை கடினமாக உள்ளன. இருப்பினும், சபை மட்டத்தில் நிதி அறிக்கைகளை சமர்ப்பிக்கும் நேரத்தில் IBNR முடிவுகள் விவாதிக்கப்பட்டன. | நிதியத்தின் தரவு நம்பகத்தன்மை மட்டத்தை மேம்படுத்த, ஆயுட்கால கணிப்பாளரால் செய்யப்பட்ட பரிந்துரைகளைச் செயல்படுத்த தேவையான நடவடிக்கைகளை முகாமைத்துவம் எடுக்க வேண்டும். |
| (b.) தேவையான ஆயுட்கால மதிப்பீட்டு தகவல்களை சேகரிக்க தக்க வைக்க மற்றும் வழங்க நிதியத்தினால் ஒரு ஆயுட்கால மதிப்பீட்டு பிரிவு நிறுவப்படவில்லை. | NITF ல் ஒரு ஆயுட்கால மதிப்பீட்டு பிரிவு நிறுவப்பட்டிருக்கவில்லை. எனவே, இது தொடர்பான தகவல்கள் நிதிப் பிரிவால் வழங்கப்பட்டு கொண்டிருக்கின்றது. | மதிப்பீட்டு செயல்பாட்டின் திறமையான செயல்பாட்டை முகாமைத்துவம் உறுதி செய்ய வேண்டும். |
| (c.) மீள் காப்புறுதி உரிமைக்கோரல் செயல்முறையைக் கையாளுவதற்கான ஆவணப்படுத்தப்பட்ட கொள்கை மற்றும் செலுத்த வேண்டிய கடப்பாடுகளை அடையாளம் காண்பதற்கு நிதியத்திற்கு கிடைப்பனவு அற்ற தன்மையாக இருக்கிறது. எனவே, முதன்மை அறிக்கை ஆவணத்திலிருந்து மீள் காப்புறுதி கடப்பாட்டினை நிதியம் அடையாளம் கண்டு பதிவு செய்கிறது. | உரிமைகோரல்களைத் தீர்ப்பதற்கு குறிப்பிட்ட ஆவணம் எதுவும் அமைக்கப்படவில்லை, இது கொள்கை, உரிமைகோரல் மற்றும் வகுப்பின் தன்மையில் தங்கியுள்ளது. சாதாரணமாக RI துறையானது, உரிமைகோரலைத் தீர்ப்பதற்கு முன் குறிப்பிடப்பட்ட ஆவணங்கள் என்பதை உறுதியளிக்கிறது. இருப்பினும், அதற்கேற்ப தலைமை மீள்காப்புறுதியாளர் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் உரிமைகோரல்களைத் தீர்ப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்றன. | நிதியத்தின் முக்கிய செயல்பாடுகளுக்கான கொள்கைகள் கிடைப்பனவு உள்ளதாக இருப்பதை முகாமைத்துவம் உறுதி செய்ய வேண்டும். |

| | | |
|---|---|---|
| (d.) மேலதிக நேர கொடுப்பனவுகளை செயலாக்குவதற்கு நிதியமானது அங்கிகரிக்கப்பட்ட மேலதிக நேரக் கொள்கையை கொண்டிருக்கவில்லை. அல்லது தாபன நடைமுறைகளில் உள்ள ஏற்பாடுகளை பின்பற்றவில்லை. | இயக்குனர்கள் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரப் பிரதிநிதித்துவத்தின் படி, OT அனுமதிகளின் வரம்புகள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி, அதிகார வரம்புகளின் அடிப்படையில் நிறுவனம் மேலதிக நேர கொடுப்பனவுகளை செலுத்தியுள்ளது. மேலும், E குறியீட்டில் உள்ள OT இன் விதிகளை நடைமுறைப்படுத்த இயக்குநர்கள் குழுவின் ஒப்புதலை நிறுவனம் பெறவில்லை. | |

## 3.2 சர்ச்சை தன்மையுடைய கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (a.) 25 மார்ச் 2008 திகதியிடப்பட்ட அசாதாரண வர்த்தமானி எண் 1542/11 இன் பந்தி 3(1) இன் படி, வேலைநிறுத்தம், கலவரம், சிவில் கலவரம் மற்றும் பயங்கரவாதத்திற்கான காப்புறுதிக் கொள்கைகளை வழங்குவதன் மூலம் வசூலிக்கப்படும் தவணையானது அரச வங்கியில் பராமரிக்கப்படும் கணக்கில் செலவு வைக்கப்படும். எவ்வாறாயினும், மோட்டார் அல்லாத காப்புறுதிக் கொள்கைகளில் வசூலிக்கப்படும் தவணையானது முறையான சட்ட ஏற்பாடுகள் எதுவும் இல்லாமல் காப்புறுதி கம்பனிகளுக்கு 20% தரகினை அனுமதித்த பிறகு நிதியத்தில் வரவு வைக்கப்பட்டிருந்தது. மதிப்பாய்வின் கீழ் உள்ள ஆண்டிற்கான தரகாக மோட்டார் அல்லாத காப்புறுதிக் கொள்கைகளில் இருந்து அனுமதிக்கப்பட்ட தொகை ரூபா. 1,228,933,582 ஆகும். | மோட்டார் அல்லாத மொத்த தவணைப்பணம் (100%) விலைப்பட்டியலிட்டு தவணைப்பண வருமானமாக பதிவு செய்யப்படுகிறது. இருப்பினும், முதன்மை காப்புறுதியாளரின் சந்தைப்படுத்தல் மற்றும் நிர்வாகச் செலவை ஈடுகட்ட NITF ஆல் 20% தரகு செலுத்தப்பட வேண்டும். கடன் குறிப்புகள் பொது கம்பனிகளிடமிருந்து 20% தரகுக்காக பெறப்பட்டு, NITF ஆல் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும். அதற்கு பதிலாக NITF, தீர்ப்பனவில் உள்ள விலைப்பட்டியலில் இருந்து செலுத்த வேண்டிய கடன் குறிப்பு தரகினைக் கழிக்க அனுமதிக்கிறது. | வேலைநிறுத்தம், கலவரம், சிவில் கலவரம் மற்றும் பயங்கரவாத பாதுகாப்புக்கான மோட்டார் அல்லாத கொள்கைகளை வழங்குவதன் மூலம் வசூலிக்கப்படும் தவணைப்பணத்திற்கு தரகு செலுத்துவதற்கான சட்டப்பூர்வ தன்மையை கம்பனி மதிப்பீடு செய்து தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |
| (b.) 25 மார்ச் 2008 திகதியிடப்பட்ட அசாதாரண வர்த்தமானி எண் 1542/11 இன் பந்தி 3(1) இன் படி, வேலைநிறுத்தம், கலவரம், சிவில் கலவரம் மற்றும் | NITF ஆல் SRCC & Fund இன் தொடக்கத்திலிருந்தே மோட்டார் வகுப்பிற்காக செயல்படுத்தப்பட்ட மோட்டார் XOL ஏற்பாட்டின் படி தொடர்ந்து | வேலைநிறுத்தம், கலவரம், சிவில் கலவரம் மற்றும் பயங்கரவாத பாதுகாப்புக்கான மோட்டார் கொள்கைகளை வழங்குவதன் மூலம் |

| | | |
|---|---|---|
| | பயங்கரவாதத்திற்கான காப்புறுதிக் கொள்கைகளை வழங்குவதன் மூலம் வசூலிக்கப்படும் தவணையானது அரச வங்கியில் பராமரிக்கப்படும் கணக்கில் செலவு வைக்கப்படும். எவ்வாறாயினும், வேலைநிறுத்தம், கலவரம், சிவில் கலவரம் மற்றும் பயங்கரவாத பாதுகாப்பிற்காக காப்புறுதி கம்பனிகளால் வசூலிக்கப்பட்ட மொத்த தவணையில் 12% மட்டுமே மோட்டார் காப்புறுதிக் கொள்கைகளில் இருந்து சரியான சட்ட ஏற்பாடுகள் எதுவும் இல்லாமல் நிதியம் வசூலித்துள்ளது. எனவே, மதிப்பாய்வின் கீழ் உள்ள ஆண்டிற்கான நிதியத்திற்கான தவணையின் குறைப்பு ரூபா. 10,155,796,304 ஆகும். | நடைமுறைப்படுத்தப்பட்டது, அதன்படி அவ்வப்போது மோட்டார் வகுப்பு அதிகப்படியான இழப்பு ஏற்பாட்டின் (XOL) கீழ் வசூலிக்கப்படும் தவணைப்பணத்தின் சதவீதம் தீர்மானிக்கப்பட்டது, இதனால் சபைத் தீர்மான எண். 53-16 தவணைப்பணமாக பெறப்பட்ட பணம் காப்புறுதிக் கம்பனிகளால் சேகரிக்கப்பட்ட மொத்த தவணைப்பணத்தில் 12% ஆகும். இருப்பினும், 12% ஐ முடிவு செய்வதற்கு முன், அதே ஆண்டில் மொத்த தவணைப்பணத்தில் 15% கோரப்பட்டது, அந்த முடிவை தொழில்துறையினர் எதிர்த்ததால் அது இறுதியாக 12% ஆகக் குறைக்கப்பட்டது. 2021 இல் NITF இன் முகாமைத்துவமானது XOL ஏற்பாட்டின் தற்போதைய நடைமுறையை இடைநிறுத்துவதற்கான வாய்ப்பைக் குறிப்பிட்டது, மோட்டார் தவணைப்பணத்தை வசூலிப்பதற்கான தற்போதைய நடைமுறையை மாற்றி, 01.04.2022 முதல் 100% தவணைப்பணத்துடன் மோட்டார் காப்புறுதி வகுப்பில் சபை பத்திர எண். 172-03 இன் படி 100% பொறுப்பை ஏற்க முடிவு செய்யப்பட்டது. இந்த முடிவை செயல்படுத்துவதில் தொழில் துறையினர் எதிர்ப்பு தெரிவித்ததால், அமுலாக்கம் ஒத்திவைக்கப்பட்டது. | வசூலிக்கப்படும் தவணைப்பணத்திற்கு தரகு செலுத்துவதற்கான சட்டப்பூர்வ தன்மையை கம்பனி மதிப்பீடு செய்து தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |
| (c.) | 2007 இன் 28 ஆம் இலக்க (திருத்தப்பட்ட) தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியச் சட்டம் மற்றும் 21 டிசம்பர் 2012 திகதியிடப்பட்ட அசாதாரண வர்த்தமானி அறிவித்தல் எண் 1791/4 இன் படி, இலங்கையின் பொது (ஆயுள் அல்லாத) மீள் காப்புறுதியில் 30% கட்டாயக் கூறாக | மீள்காப்புறுதி வணிகத்தின் தன்மை மற்றும் நடைமுறையின் படி, இலங்கையில் உள்ள முதன்மைக் காப்புறுதி கம்பனிகள் வெளிநாட்டு மீள்காப்புறுதியாளர்களின் குழுவுடன் தமது | கட்டாயமான 30 சதவீத மீள்காப்புறுதிக் காப்பீட்டில் இருந்து வசூலிக்கப்படும் தவணைக்கட்டணத்திற்கு தரகு செலுத்துவதற்கான சட்டப்பூர்வமான தன்மையை கம்பனி மதிப்பீடு செய்து |

| | | |
|---|---|---|
| நிதியம் வைத்துள்ளது. எவ்வாறாயினும், கட்டாயக் கூறை மீள் காப்புறுதி செய்யும் மீள் காப்புறுதியாளர்களுக்கு நிதியம் ஒரு தரகினை வழங்கியது அவதானிக்கப்பட்டது. நிதியமானது 13 பொதுக் காப்புறுதி கம்பனிகளுக்கு 2017 முதல் 2020 வரையிலான ஆண்டுகளுக்காக மேற்கூறிய கட்டாயக் கூறுக்காக மீள் காப்புறுதி தரகாக ரூபா. 6,720,273,899 தொகையினை உரிய சட்ட ஏற்பாடுகள் எதுவும் இல்லாமல் செலுத்தியிருந்தது. | மீள்காப்புறுதி காப்பீட்டு ஏற்பாடு செய்துகொள்கின்றன மற்றும் NITF ஆனது கட்டாயமான 30% கூறின் கீழ் குழுவிற்கு ஒரே ஒரு மீள்காப்புறுதியாளராக மாற வேண்டும். இருப்பினும், மீள்காப்புறுதி உடன்படிக்கையானது அதிக சதவீத அபாயத்தை ஏற்றுக்கொள்ளும் முன்னணி மீள்காப்புறுதியாளருடன் ஆரம்பத்தில் ஒப்புக்கொண்டு கையெழுத்திடப்பட்டது. மீள்காப்புறுதி விதிமுறைகளின் படி, குழுவில் உள்ள மற்ற அனைத்து மீள்காப்புறுதியாளர்களும் அதே விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளைப் பின்பற்றுகின்றனர். எனவே, தரகின் சதவீதத்தை முதலில் தலைவர் ஒப்புக்கொண்டார் என்பதை NITF ஏற்க வேண்டும். | தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

### 3.3 பெறுகை முகாமைத்துவம்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவ கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| இந்த கால கட்டத்தில் இழப்பீட்டு மீள் காப்புறுதி ஒப்பந்தத்தின் (பேரழிவு ஏற்படுவதற்கான இடர் (Risk Catastrophe)) முழுக் கணக்கிற்கும் அதிகமான தொகையை ஈடுகட்டுவதற்காக மீள் காப்புறுதி ஒப்பந்தத்தைப் பெறுவதற்கு பதினொரு (11) மாதங்கள் தாமதம் காணப்பட்டது அவதானிக்கப்பட்டது. மற்றும் எந்த மீள் காப்புறுதி காப்பீடும் இல்லாமல் 30% கட்டாயக் கூறுடன் நிதியம் தொடர்ந்தது. இந்த கால கட்டத்தில் ஏதேனும் உரிமைக்கோரல் ஏற்பட்டால் அது நேரடியாக நிதியத்தின் செயற்பாடுகளைப் பாதிக்கும். நிதியத்தில் காப்புறுதி செய்யப்பட்ட இடருக்கான (Retrocession) மீள் காப்புறுதிக்கான பெறுகை நடைமுறைகளில் ஏற்பட்ட தாமதமே இந்த தாமதத்திற்கு காரணமாகும். | 2019 ஆம் ஆண்டு மார்ச் 15 ஆம் திகதியிலிருந்து தொடங்கிய ஒரு வருட காலத்திற்கு 30% கட்டாய மீள்காப்புறுதித் கூறுக்கான மீள்காப்புறுதி காப்பீட்டுத் தொகையைப் பெறுவதற்கு பெறுகைச் செயல்முறை 18 ஜூலை 2018 அன்று தொடங்கப்பட்டது. அந்த நேரத்தில் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் இளைஞர் விவகாரங்கள், திட்ட மேலாண்மை மற்றும் தெற்கு மேம்பாட்டு அமைச்சின் கீழ் இருந்தது. | நிதியத்தினால் உத்தரவாதம் அளிக்கப்படும் அபாயத்தை நிர்வகிப்பதற்கு முகாமைத்துவம் சரியான நேரத்தில் மீள்காப்புறுதிக் காப்பீடுகளைப் பெற வேண்டும். |